தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடைக்கு வரும் மரவள்ளிக் கிழங்கின் விலை நிலையாக இருக்கும்

இந்தியா மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் உலகளவில் 10வது இடத்தில் உள்ளது. மொத்த மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி 2.14 இலட்சம் எக்டரிலிருந்து, 7.74 மில்லியன் டன்களாகும். மரவள்ளிக்கிழங்கின் இந்திய ஏற்றுமதி 73.7 மில்லியன் (2012-13) இருந்து, 133.2 மில்லியனாக (2013-14) அதிகரித்துள்ளது. இந்தியா இக்கிழங்கினை பச்சையாகவும், மாவுபொருள் (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசியாகவும் ஏற்றுமதி செய்கிறது. இந்திய மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் தமிழ்நாடு 64 சதவீத பங்களிப்பபை கொண்டு முதலிடத்தில் உள்ளது. மேலும், மாவுப்பொருள் (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியிலும் பெரும்பங்கு வகிக்கிறது. ஒரு இலட்சம் எக்டர் பரப்பளவில் குறிப்பாக நாமக்கல், தருமபுரி, சேலம், விழுப்புரம். திருச்சிராப்பள்ளி, ஈரோடு மற்றும் கடலூர் உட்பட மொத்தம் 14 மாவட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு முக்கிய பயிராக பயிரிடப்படுகிறது.

மரவள்ளிக்கிழங்கு விலை நிர்ணயம் செய்வதில், மாவுப்பொருள் (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசியின் விலை முக்கிய பங்கு வகிக்கிறது. மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி, மாவுப்பொருள் (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசி உற்பத்தி, மக்காசோள மாவுப்பொருள் (ஸ்டார்ச்) கலப்படத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, கடந்த ஜூலை –ஆகஸ்ட் மாதங்களில் குவிண்டாலுக்கு 1100 முதல் 1300 ரூபாய் வரை விற்ற மரவள்ளிக்கிழங்கு, விலை தற்போது குறைந்து குவிண்டால் ரூ.800 முதல் ரூ.900 வரை விற்கப்படுகிறது. இதே போல, 90 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 4,500க்கு விற்கப்பட்ட மரவள்ளிக்கிழங்கு மாவுபொருள் (ஸ்டார்ச்) கடுமையாக விலை குறைந்து ரூபாய் 2,200க்கு விற்கப்படுகிறது. மாவுப்பொருள் (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசி பொருட்கள் இடையே உள்ள விலை வேறுபாடு ரூபாய் 4000 ஆக உள்ளது. இதன் காரணமாக, மரவள்ளிக்கிழங்கு விலை குறைந்துள்ளதால் விவசாயிகளின் இலாபம் பாதிக்கப்படும் சூழல் நிலவுகிறது.

தொழிற்சாலைகளுக்கு மரவள்ளிக்கிழங்கு வரத்து ஜூலை மாதத்திலிருந்து, ஏப்ரல் மாதம் வரை கிடைக்க பெறுகிறது. ஆனால், நவம்பர் முதல் பிப்ரவரி வரையுள்ள மாதங்களில், அதிகமான வரத்து கிடைக்கின்றன. இதற்க்கான காரணம் குளிர்காலத்தில் கிழங்கின் மாவுச்சத்து ஒருங்கிணைப்பு அதிகமாக உள்ளதே ஆகும். மாவுப்பொருள் (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலைகள் அதிக அளவில் இம்மாதங்களிலே இயக்கப்படுகின்றன. அக்டோபர் மாதம் முதல் வரத்து அதிகமாக காணப்படுகிறது.

இந்த சூழ்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 14 வருடங்களாக சேலம் மொத்த சந்தைகளில் நிலவிய விலை பற்றி ஆய்வு மேற்கொண்டது. அதன்படி, வருகின்ற நவம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை மரவள்ளிக்கிழங்கிற்கு விவசாயிகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.11 முதல் ரூ.12 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் அறுவடை செய்த மரவள்ளிக்கிழங்கை உடனே விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி – 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி – 0422 -6611374/ 0422-6611283

மக்கள் தொடர்பு அலுவலர்